பக்கங்கள் 8

RECEIVED
1980-5-19
PERIODICALS DIVISION

சுவை, சுத்தம்,
சுகாதாரம் நிறைந்த
உல்லாசப் பயணிகளை
கவர்ந்த
சைவ ஓட்டல்
அசோக் பவான்
112, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 8095

# ஈழநாடு
# The EELANAADU

50 சதம்

மலர் 22 | யாழ்ப்பாணம் | வைகாசி 6 | திங்கட்கிழமை | றஜப் 4 | இதழ் 99 | 19-5-80

புதிய கமராக்கள்
பிளாஷ் முதலியன
விற்பனைக்கு
பாரத் சென்ரர்
178, நவீன சந்தை
(புதிய கட்டிடம்
உள்பக்கம்)
யாழ்ப்பாணம்
போன்: 8265

★ சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியர்கள்

# சம்பளப் பணம் கொள்ளை:

# ஐவர் கைது!

## 48,000 ரூபாவையும் யாழ். ஹோட்டலில் பங்கிட்டனராம்

### 'கொள்ளைபற்றி சிறையில் திட்டமிடப்பட்டது'

(யாழ்ப்பாணம்)

சாவச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர்கள் சம்பளப்பணம் 48,000 ரூபா கொள்ளை தொடர்பாக, பொலிஸார் 5 இளைஞர்களைக் கைது செய்துள்ளனர். இவர்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணத்தில் ஒரு பகுதியையும், கொள்ளையடிக்கப்பட்ட கைக்கடிகாரத்தையும், கொள்ளைக்குப் பாவிக்கப்பட்டதாகக் கூறப்படும் காரொன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வருடம் ஜனவரிமாதம் 21ம் திகதி சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் திரு. பி. வெற்றிவேலுவும், சில ஆசிரியர்களும் வங்கியிலிருந்து சம்பளப்பணமான 48,000ரூபாவை காரில் கொண்டுவந்தபோது கல்லூரி வாசலில் வைத்து துப்பாக்கி முனையில் பணம் கொள்ளையடிக்கப்பட்டது.

**துணிகரச் சம்பவம்**

இச்சம்பவத்தின்போது, ஆசிரியர்கள் துணிச்சலுடன் போராடி இளைஞர் ஒருவரின் துப்பாக்கியை பறிக்க முயற்சித்த சம்பவத்தின்போது அதிபர் சிறுகாயமடைந்ததுடன், காரும் சிறிது சேதமடைந்தது. கொள்ளையடித்த பணத்துடன் சென்ற இளைஞர்களை துணிச்சலுடன் உயர் வகுப்பு மாணவர் துரத்திச் சென்றபோதும் அவர்கள் தப்பிச்சென்றுவிட்டனர்.

**பொலிஸ் அதிபர் நடவடிக்கை**

யாழ். பொலிஸ் அதிபர் திரு. விங்ஸிலி விக்கிரமசூரியா தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினர் கடந்த 3 மாதகாலமாக கொள்ளையில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் இளைஞர்களின் நடமாட்டங்களை கண்காணித்து வந்தனர்; நடமாட்டத்தை அவதானித்தனர்: அந்த இளைஞர்கள்தான் கொள்ளையுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்பதில் திருப்தி அடைந்தபின் அவர்களைக் கைதுசெய்தனர்.

பொலிஸ் அதிபர் தலைமையில் இயங்கிய இப்பொலிஸ் கோஷ்டியில் ஆனைக்கோட்டைப் பொலிஸை சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் கே. எம். சரச்சந்திரா, சார்ஜன் தில்லான்துரை, தயானந்தா, ரணசிங்கா, திருவிளங்கம், மகேஸ்வரநாதன் ஆகியோர் அடங்கியிருந்தனர். தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. சந்திரா பெரேராவும் உதவியாகப் பணியாற்றினர்.

**சந்தேகநபர்கள் ஐவர்**

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் விபரம் வருமாறு: (1) சின்னத்துரை கோபால் (26 வயது) சங்கத்தானை சாவகச்சேரி, (2) நல்லையா சற்குணராசா (26 வயது) டச்சுவீதி சாவகச்சேரி, (3) கனகரத்தினம் ஜெயக்குமார் (28 வயது) 1ம் வட்டாரம் புங்குடுதீவு, (4) வல்லிபுரம் பகேந்திரன் (26 வயது) டச்சுவீதி சாவகச்சேரி, [5] வேலுப்பிள்ளை முருகதாஸ் [28 வயது] சங்கத்தானை சாவகச்சேரி.

சாரதியான வேலுப்பிள்ளை முருகதாசை தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் சந்திரா பெரேரா கைதுசெய்து அவரிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணத்தின் ஒரு பகுதி

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ்.ப.நோ.கூ.ச.கூட்டத்தில்

## அமளி துமளி!

### இருவர் வெளிநடப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. எம். ஆலாலசுந்தரம் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும் என்று சபைக்கூட்டத்தில் முன் எச்சரிக்கை செய்யப்பட்டது.

கூட்டம் பதட்டமான நிலையில் கடந்த சனிக்கிழமை முற்பகல் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஏற்கனவே நடந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று ஒரு சில உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

அத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் சிக்கல்பற்றி தலைவர் எடுத்துக்கூறியபோது பலத்த வாக்குவாதம் அமளி துமளி நடந்ததுடன் நம்பிக்கையில்லாப் பிரேரணை பற்றி மிரட்டலும் இடம்பெற்றது.

பதட்டமான நிலையில் இரு உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர். ஆயினும் சமாதான முயற்சியின் பின்னர் அவர்கள் இருவரும் மீண்டும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (ச)

## சட்டத்தைமீறி உயிர்ப்பலி முயற்சி?

## கவுணவத்தை ஆலயம்மீது பொலிஸார் தீவிர கவனம்!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை பொலிஸ் பகுதியில் சட்டத்திற்குமாறாக கோவில் ஒன்றில் மீண்டும் உயிர்களைப்பலியிட எடுக்கும் நடவடிக்கையை தீவிரமாகக் கண்காணிக்குமாறு பிரதி பொலிஸ்மா அதிபர் காங்கேசன்துறைப் பொலிசாரைப் பணித்துள்ளார்.

காங்கேசன்துறை பொலிஸ் பகுதியைச் சேர்ந்த பல கோவில்களிலும் இம்முறை உயிர்ப்பலி நிறுத்தப்பட்டபோதும் மாவிட்டபுரம் கவுணவத்தை வைரவர் கோவிலில் மட்டும் சட்டத்திற்கு மாறாக மீண்டும் உயிர்ப்பலி செய்ய முயற்சிக்கப்படுவதாக பிரதி பொலிஸ்மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதையடுத்தே அவர் காங்கேசன்துறை பொலிசாரை மேற்கண்டவாறு பணித்துள்ளார்.

இதையடுத்து மேற்படி கோவிலில் மீண்டும் உயிர்ப்பலியை நடத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறதா? அதில் ஈடுபடுபவர்கள் யார்? என்ன விதத்தில் உயிர்ப்பலி இடம் பெறப்போகிறது? என்பது பற்றிய விபரங்களையெல்லாம் பொலிசார் சேகரித்து வருவதுடன் தீவிரகண்காணிப்பிலும் ஈடுபட்டுள்ளனர்.

பாரம்பரியமாக இக்கோவிலில் வேள்வி நடைபெற்றுவருவதால், அதனைத் தொடர்ந்தும் மேற்கொள்ளப்போவதாக முன்னாள் வவனியா எம். பி. திரு ரி. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக சட்டப்பிரச்னையை எழுப்பப்போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேநேரத்தில் உயிர்ப்பலி

(8-ம் பக்கம் பார்க்க)

## நரபலி சம்பவ முயற்சி: டி.ஐ.ஜி. விபரம் கோருகிறார்!

(மாவிட்டபுரம்)

புதையல் எடுப்பதற்கு 18 வயது இளம்பெண்ணை நரபலி கொடுக்க முயன்றதாகக் கூறப்படும் சம்பவம் குறித்த முழு விபரங்களையும் வடபிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் திரு பி மகேந்திரன் காங்கேசன்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. மெண்டிஸ் பெர்ணாண்டோவிடம் கோரியுள்ளார்.

மயிலிட்டி வடக்கில் புதையல் எடுப்பதற்காக 18 வயது இளம்பெண் ஒருவரை நரபலி கொடுக்க முயற்சிக்கப்பட்டதாகவும் அதனையறிந்த காங்கேசன்துறைப் பொலிசார் அவ்விடத்திற்கு விரைந்து அம்முயற்சியை தடுத்து நிறுத்தியதாகவும் 'ஈழநாடு' பத்திரிகையில் அண்மையில் வெளியாகி இருந்தது தெரிந்ததே.

இதுதொடர்பாக வட பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு பி மகேந்திரன் காங்கேசன்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் "ஈழநாடு" [illegible] செய்தியை சுட்டிக்காட்டி சம்பவம் சம்பவம்பற்றி அறிந்து கொண்டதாகக் குறிப்பிட்டு, இச்சம்பவம் தொடர்பான முழுவிபரங்களையும் தமக்கு தெரியப்படுத்துமாறு கோரியுள்ளார்.

MASTER INSTITUTES
B. M. C. ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
ஆரம்பம்: 19-05-1980
விலங்கியல் - திரு சிவபாதம்
இரசாயனவியல் - திரு. BAR, திரு குணசுரன்.
தாவரவியல் - பிரபல ஆசிரியர்.
பௌதிகவியல் - திரு. தெய்வேந்திரா. திரு விமலராஜ்,
தூயகணிதம் பிரயோககணிதம் - திரு. ரவிமோகன். திரு. நல்லையா.
மேலதிக விபரங்களுக்கு: நிருவாகி
5820

யாழ். மாவட்ட

## தேசியஇளைஞர் சேவை மன்ற இளைஞர்வாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தினரின் இளைஞர்வாரத்தை யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யு பி. விஜயக்கோன் இன்று மாலை ஆரம்பித்துவைக்கிறார்.

இன்றைய நிகழ்ச்சிகள் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளன, பல்வேறு நிகழ்ச்சிகளும் தொடர்ந்து 24 ம் திகதிவரை நடைபெறவுள்ளன.

இன்று மாலை 5-30 மணிக்கு பஞ்சாபிகேசன் குழுவினரின் நாதஸ்வரஇசையுடன் விழா ஆரம்பமாகும் யாழ் மாவட்ட அமைச்சர் விழாவை ஆரம்பித்துவைப்பார் மாலை 6 மணிக்கு இராமநாதன் இசைக் கல்லூரி மாணவிகளின் பரத நாட்டியம், கைதடி இளைஞர் சேவை திட்டத்தினரின் "மலர்ந்த உறவுகள்" நாடகமும் பருத்தித்துறை இளைஞர்களின் "அலீமா" நாடகமும் நடைபெறும். (கொ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்துக்கு அண்மையில் மிக நல்ல குடிதண்ணீர்க் கிணறுடன் 4 அறை கொண்ட மின்சார வசதியுடன் கூடிய வீடும் 1 1/4 பரப்புடைய காணியும் உடனடியாக விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு தொடர்பு கொள்ளவும்: 24, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5811

நல்ல நிலையிலுள்ள 9 சிறி தொடர் இலக்கமுடைய ஹொண்டா CB 125 மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. நேரில் காலை 9—12 மணிவரை பார்வையிடலாம் தொடர்பு: 180, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 5806

### தேவை

யாழ். நகரில் க. பொ. த. உயர் வகுப்பு மாணவர் ஒருவருக்கு தூயகணிதம், பிரயோக கணிதம் ஆகியன வீட்டுக்கு வந்து கற்பிக்க அனுபவமிக்க ஆசிரியர் தேவை. உடன் விண்ணப்பிக்க விளம்பர இல: 5814, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 5814

### WANTED

Wanted A well experienced Accounts Clerk and two Lady Clerks for our Factory Office. Apply personally with certificates and handwritten applications-Arasco Industries 163 Kandy Road, Jaffna. 5801

## அரச அதிபருக்கு பாராட்டு

(பச்சிலைப்பள்ளி)

யாழ்ப்பாணம் - ஆழியவளைப் பாதையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்த இரண்டு பஸ்களில் ஒன்று நான்கு மாதங்களுக்கு முன்பு விபத்துக்குள்ளாகியதால் ஒரு பஸ் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டு ஒரு நாளில் இரண்டு சேவை மட்டுமே நடத்தப்பட்டு வந்தது. இதனால் இப்பகுதி மக்கள் மிகவும் போக்குவரத்துக் கஷ்டங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

அண்மையில் யாழ். அரசாங்க அதிபர் இப்பகுதிக்கு விஜயம் செய்த போது இப்பகுதி மக்கள் தமது போக்குவரத்துக் கஷ்டத்தினை எடுத்து கூறியதிற்கிணங்க, அரசாங்க அதிபர் அரசாங்க செயலகத்திற்குச் சென்ற மறுதினமே இதுபற்றி நடவடிக்கை எடுத்திருப்பதாக ஆழியவளை கிராம அபிவிருத்தி சங்கத் தலைவருக்கு தந்தி மூலம் அறிவித்ததுடன் இப் பாதையில் விபத்துக்குள்ளாகிய பஸ்ஸுக்குப் பதிலாக வேறொரு பஸ் சேவையில் ஈடுபடுத்தப்பட நடவடிக்கை எடுத்துள்ளார். அரசாங்க அதிபரின் இச்செயலைப் பாராட்டி ஆழியவளை கிராம அபிவிருத்திச் சங்கம் தந்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. (ச)

## மட்டக்களப்பில் கைத்தொழில் பேட்டை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கைத்தொழில் பேட்டை ஒன்றை அமைக்க அரசாங்கம் அங்கீகாரம் அளித்துள்ளது

இத்தகவலை பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு செல்லையா இராசதுரை தெரிவித்தார்.

மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கைப்பணிப் பொருட்காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இக் கைத்தொழிற் பேட்டையில் உள்ளூர் மூலப்பொருட்களைக் கொண்டு 25 கைத்தொழில்களை தரம் பிரிக்கப்படும் என்றும் அமைச்சர் திரு. இராசதுரை கூறினார்.

பனம் பொருள் அபிவிருத்தி சபை மட்டக்களப்பிலும் தனது நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் என்றும் அமைச்சர் கூறினார். (இ)

## தமிழ்...

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

தல்களை விரைவில் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

கரை போட்ட வேஷ்டி, சேலைகளை கைத்தறித்துறைக்கே ஒதுக்கவேண்டும் என்ற கோரிக்கைக்கு இக்கட்டணி பாடுபடும்.

சாதிக் கலவரங்கள், வகுப்புக் கலவரங்கள் ஆகியன தமிழ் நாட்டில் நடைபெறுமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாயிகளுக்கு கடன் நிவாரணம் வழங்கப்படும்

ஏழைகளின் திருமணத்திற்கு- தாலிக்குக் குறைந்த விலையில் தங்கம் வழங்கப்படும். (இ)

## Female Receptionist

LAKNIWASA GUEST HOUSE, JAFFNA

If you have a pleasing personality able to speak fluently in english and hold an ordinary level certificate you are the person we are looking for to fill the above vacancy. If interested see us at 16 Nallur cross road Jaffna Wednesday 21 st between 2 and 3 p-m for an interview those over 25 years please do not Apply. 5818

## ஆசிரியர் தேவை

வேலாயுதம் மகாவித்தியாலயம் பருத்தித்துறை

க. பொ. த. உயர்தர வகுப்புகளில் கணிதம், பௌதிகம், இரசாயனம் கற்பிப்பதற்குப் பட்டதாரி ஆசிரியர்கள், பட்டதாரி இறுதிப் பரீட்சைக்குத் தோன்றியவர்கள், ஏனைய தகைமையுடையவர்கள் விண்ணப்பங்களை 26-05-80க்கு முன் அனுப்பி வைக்கவும்.

19-05-80

அதிபர். 5805

## உலகப் பிரசித்தி பெற்ற 'ஹொண்டா' மோட்டார் சைக்கிள்களுக்கு

யாழ். மாவட்ட விநியோகஸ்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளோமென மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிட்.

4/4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

அனைவரும் வருக! நிகழ்ச்சிகள் இலவசம்!!

## தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

நடாத்தும்

## இளைஞர் வாரக் கலைவிழா

19-05-1980 திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில்

த பினுன்ஸ் கம்பெனி லிமிட்;

யாழ்ப்பாணக் கிளை ஆதரவில் நடைபெறுகிறது

நிகழ்ச்சிகள்

1. பரதநாட்டியம் (இராமநாதன் இசைக் கல்லூரி)
2. மலர்ந்த உறவுகள் (நாடகம்) (கைதடி, இளைஞர் சேவைத் திட்டம்)
3. அலிமா (நாடகம்) (பருத்தித்துறை இளைஞர்கள்)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

1. கணபதிப்பிள்ளை நாகலிங்கமும்
2. பெண் மாணிக்கம்மாவும்

கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

வழக்காளிகள்

இல. ஈந/112

எதிராக

1. கனகரத்தினம் இராசதுரையும் பெண்
2. பரமேஸ்வரியும்,

சைவப்பாடசாலை ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் M B/112- இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விவரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1980-ம் ஆண்டு மே மாதம் 19-ந் திகதி (19-05-1980) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பகிரங்க ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபா 4900/- 20-5-1976 தொடக்கம் 11-2-1977 வரைக்கும் ரூபா 3000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 434-10 இதில் 2000/- அதாவது செலவு ரூபா 434/-ம் நிலுவைத்தொகை ரூபா 1566-ம் கழித்து.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர்க் கோவிற்பற்று கோண்டாவில் இறை "ஆத்திக்குடொல்லை" பரப்பு நில இலாச்சம் நாலு (பர. நில. இலா 4) இது 1964-ம் ஆண்டு மார்கழி மாதம் 15-ந் திகதி உத்தரவு பெற்ற உலாந்தா த கந்தையாவால் தயாரித்த 1763-ம் இலக்கப் படத்தில் ஒன்று என்னும் எண்ணுற் சுட்டப்பட்ட பாகம் இந்தப் பரப்பு நாலுக்கும் எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு மாணிக்கம் கனகரத்தினத்திற்கும் கோவிலுக்குமுரிய ஆதனங்கள். மேற்கு கோவிலாதனம் தெற்கு, சிவசம்பு பெண் இராசம்மாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் இதங்கலும் தெற்கே கதிரிப்பிள்ளை பெண் சுவகம்மாவின் காணிக்குள் இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்.


க. சிவஸ்கந்தா,
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும் மதிப்பாளரும்.

நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை,
16-04-1980.

5799

முழுக்குடும்பத்துக்கும் ஏற்ற போஷாக்கு நிறைந்த பானம்...

# KLIM




'க்ளிம்' பிரசித்தி பெற்ற பால்மா உற்பத்தியாளர்களான அயர்லாந்து, போர்டன் கம்பனி லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், விட்டமின் A & D நிறைந்த 28% வெண்ணெய், கொழுப்புச் சேர்த்து உலகத்திலேயே முதன் முதலாகத் தயாரிக்கப்பட்ட பால்மா. 'க்ளிம்' சுவை நிறைந்தது. நீண்ட காலம் பத்திரப்படுத்தக்கூடியதும், சுகாதாரத்திற்கேற்ப பதப்படுத்தப்பட்ட தன்மையும் கொண்டது.

கவர்ச்சியான ரின்களில் எவரும் வாங்கக் கூடிய விலையில் கிடைக்கிறது.

பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களிலும், முன்னணி வியாபாரிகளிடமும் பெறலாம்.

விலை ரூபா 16-50

மார்க்பெட்

ஸ்ரீலங்கா கூட்டுறவுச் சந்தைப்படுத்தும் சம்மேளனம், (ம. ப.)
127, கிறேண்ட்பாஸ் றோட், கொழும்பு-14
தொலைபேசி: 24991-2-3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

பிரம்மனுடன் உனக்கு ஐக்கியம் ஏற்பட்டால்தான் மாயையின் பிணைப்பிலிருந்து நீ விடுபடுவாய்.

—சுவாமி சிவானந்தர்

## மக்கள் கருத்து

### கால்நடை உணவு கிடைக்க வழி செய்க

இலங்கையில் பாற்பண்ணைத் தொழிலையும் கோழி வளர்ப்பையும் ஊக்குவிப்பதற்காகக் கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சும், யாழ். மாவட்ட மிருக வைத்தியர்களும் பெரும் ஊக்கமும் ஆக்கமும் அளித்துவரும் அதேவேளையில் அவற்றிற்கான உணவு வகைகளைப் பெறுவதிலுள்ள கஷ்டத்தை இதுவரை தீர்த்து வைக்காதது மிகவும் கவலைக்குரியது. யாழ்ப்பாணம், நல்லூர்த்தொகுதி மக்களுக்கு நியாய விலையில் கால்நடை உணவு வகைகளை நல்லூர்த் தொகுதி அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் விநியோகித்துவந்தது. ஆனால் கடந்த சில மாதங்களாக மேற்படி நிறுவனத்தில் கால்நடை உணவு விநியோகத்தில் சீரற்ற நிலைமை தோன்றியுள்ளது. அதாவது மாட்டு உணவு வகைகள் சங்கத்திற்குப் பால் கொடுப்பவர்களைத் தவிர்ந்த ஏனையோருக்கு வழங்கப்படுவதில்லை. அதற்கு கூட்டுத்தாபனத்திடமிருந்து போதியளவு உணவுவகைகள் கிடைக்கவில்லையெனக் காரணம் கூறப்படுகிறது. ஆனால் தனியார் வியாபாரிகள் எப்பொழுதும் குறிப்பிட்ட மாட்டு உணவு வகைகளைக் கையிருப்பில் வைத்திருக்கிறார்கள். இதன் மர்மம்தான் விளங்கவில்லை. ஏன் தனியாரிடம் குறிப்பிட்ட கால்நடை உணவை வாங்கக் கூடாது என்று காரணம் கேட்கலாம். வெளி வியாபாரிகள், சங்கத்தின் விலையிலும் இருமடங்கு விலையில் மேற்படி உணவை விற்பனை செய்கிறார்கள். இந்த அநியாய வாரியத்துக்கு நல்லூர்த் தொகுதி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் உடந்தையென்றே எண்ணத் தோன்றுகிறது. ஆகவே இதை உரியவர்கள் கவனத்திலெடுத்து எந்நாளும் எவ்வளவு கால்நடை உணவுவகைகளும் கையிருப்பில் இருக்கக்கூடிய முறையில் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஒரு பண்ணையாளன்**

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

### அலங்கார உற்சவம்

(காங்கேசன்துறை)

கயாத்துறை ஆனந்தம் பிள்ளையார் கோவில் அலங்கார உற்சவம் 16ந் சென்ற வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்களும் விசேஷ அபிஷேகம் நடைபெற்று இம் மாதம் 25ம் திகதி முடிவடையும். தினமும் திருவாளர்கள் பொன். சோமசுந்தரம் க. பரம்சோதி ஆகியோர் தலைமையில் 'திருத்தொண்டர்கள்' பற்றி திருஅருட்செல்வி திருமதி. சிவபாக்கியம் பாலநாதனும், 'ஆனந்தக் கணபதி சிந்தனை' பற்றி திரு ந. ஏரம்பமூர்த்தியும் உரையாற்றுகிறார்கள்.

(ஈ)

# 'ஹிட்லர் ஆட்சி ஏற்ற சூழ்நிலை இன்று எங்கும் நிலவுகிறது'

## பாசிச எதிர்ப்பு நினைவுக் கூட்டத்தில் 'அமிர்'

(யாழ்ப்பாணம்)

"தேசிய சோஷலிசம் என்று கூறிக்கொண்டு அதிகாரத்திற்கு வந்த ஹிட்லர், சிறுபான்மையினரான 6 லட்சம் யூதர்களைக் கொன்றுகுவித்து மக்களுக்குப் பல வழியிலும் இன்னல் செய்தார். இந்த நாட்டிலும், ஜனாதிபதி ஜே. ஆரும் தான் ஒரு சோஷலிசவாதியென்று கூறிக்கொண்டு ஆட்சி நடத்திவருகிறார். பேசுவது சோஷலிசம். அழிப்பது சோஷலிசத்தின் அடிப்படையை".

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த பாஸிஸ எதிர்ப்பு 35வது ஆண்டு நினைவிழாவில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

**அரசின் சோஷலிசம்**

திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"ஜேர்மன் வழங்கிய துல்லிய நெசவாலையை, தனியாரிடம் ஒப்படைக்குமளவிற்கு அரசின் சோஷலிசம் போய்விட்டது.

''ஹிட்லர் எடுத்த எடுப்பில் அதிகாரத்திற்கு வரவில்லை. ஜனநாயக ரீதியாக அரசியல் அமைப்பைப் பயன்படுத்தி, தேர்தல் மூலம் அதிகாரத்திற்கு அவர் வரக்கூடியதாக இருந்தது. ஹிட்லர் அதிகாரத்தைக் கைப்பற்றியது அரசியலமைப்பின் மூலம்தான். அதன் கீழ்தான் அவசரத் தெரிவுசெய்யும் சூழ்நிலை ஏற்பட்டது.

''பாராளுமன்றத்திற்குத் தமது கையாட்கள் மூலம் தீவைத்துவிட்டு, அதற்கான பொறுப்பை ஜேர்மன் கம்யூனிஸ்டுகள் மீது சுமத்தி ஹிட்லர் பழிவாங்கினார். அவர்களை வேட்டையாடினார். இப்படித்தான் பாஸிசம் அதிகாரத்திற்கு வந்தது.

இன்று உலகில் பாஸிசத்தை ஒழித்துவிட்டதாகக் கூறுகிறார்கள். ஆனால் அது சில இடங்களில் தலைதூக்கி வருவதைக் காண்கிறோம்.

ஜேர்மன் இனம் உலகில் அதி உன்னத இனமென்றும், ஆரிய இனமென்ற கருத்தை வளர்த்து வந்தது உலகில் மற்ற இனங்களை ஆளுவது கடமையென்ற எண்ணத்தை உருவாக்கி, அதன் மூலம் ஹிட்லர் அதிகாரத்திற்கு வந்தார்.

"பெரிய பொருளாதார நெருக்கடிச் சூழ்நிலை, மேற்கு நாடுகளில் மாத்திரமின்றி இலங்கை நாட்டிலும் ஏற்பட்டுள்ளது. வாழ்க்கைச்செலவு உயர்வு, வேலையில்லாத்திண்டாட்டம், பணத்தின் பெறுமதிவீழ்ச்சி தலைவிரித்தாடுகின்றன. எந்தச் சூழ்நிலையில் அன்று ஹிட்லர் ஆட்சிக்கு வந்தாரோ அந்த சூழ்நிலை எல்லா நாடுகளிலும் உருவாகிவருகிறது.

**காடைத்தனம்**

ஹிட்லர் திட்டமிட்டு காடையர்கள் மூலம் தொழிற்சங்கவாதிகளை, முற்போக்கு சக்திகளைப் பயமுறுத்தி வீழ்த்தினார். இலங்கைத் தீவிலும் அதே போன்ற சக்திகள் தலைவிரித்து நிற்கிறது. தொழிற்சங்கத்தினர் மறியல் போராட்டம் நடத்தியபோது காடையர்களை, ஹிட்லர் வழியில் ஏவிவிட்ட சக்திகள் தென்னிலங்கையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றன.

"தொழிலாளர் மட்டுமல்ல, மாணவர்களை, இளைஞர்களை அச்சக்திகள் தாக்கிவருகின்றன. பல்கலைக்கழகத்தில் மாணவர் மீது தாக்குதல் நடந்தது. ஒரு கொலையும் நடந்தது. இதற்கு பின்னணி சக்திகள் யார் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

**தமிழர் காரணமாம்**

ஜேர்மன் பொருளாதாரப் பிரச்னைக்கு யூத மக்கள்தான் காரணமென்று ஹிட்லர் பிரசாரம் செய்தார். எங்கள் நாட்டிலும் சில காலமாக, சிங்கள மக்களின் பிரச்னைகளுக்குத் தமிழ்மக்கள்தான் காரணமென்று கூறிவருகின்றார்கள்.

[7ம் பக்கம் பார்க்க]

# "அரசின் சமாதானக்கொள்கையை அமுல்படுத்துமாறு இடதுசாரி இயக்கங்கள் போராட முன்வரவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"கடந்த காலத்தில் ஜேர்மன் ஜனநாயக குடியரசு இலங்கைக்குப் போதியளவு உதவி செய்திருக்கிறது. இத்தப் பொருளாதாரப் பரிவர்த்தனை மூலம் ஐக்கியம் ஒங்கி உலக சமாதானம் ஏற்பட வழி ஏற்படும்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த பாசிசத்தை எதிர்த்து வெற்றி கண்ட 35-ம் ஆண்டு தினக் கொண்டாட்டத்தில் ஜேர்மன் கிழக்கு சோஷலிச குடியரசு தூதுவர் திரு புறுனேமே மேற்கண்டவாறு கூறினார்.

ஜேர்மன் இலங்கை நட்புறவுச்சங்க யாழ். கிளைத்தலைவரும் வட்டுக்கோட்டை எம். பியுமான திரு. அ.திருநாவுக்கரசு தலைமையில் நடந்த இவ்விழாவில் கி ஜர்மன் தூதுவர் மேலும் கூறியதாவது:

நாங்கள் நாட்டின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டபோது உலக சமாதானத்திற்கான இயக்கங்களை ஆரம்பித்து அதற்காக உழையுங்கள் எனப்பணிக்கப்பட்டுள்ளோம்.

"சமீபத்தில் ஜனாதிபதி ஜே. ஆர். வெளிநாட்டுக் கொள்கை பற்றி வெளியிட்டுள்ள 4 அம்ச அறிக்கை மூலம் இலங்கையைச் சமாதானப் பாதையில் வழி நடத்திச் செல்ல முயற்சிக்கலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அந்த 4 அம்ச அறிக்கையில் உலக சமாதானத்திற்கு இலங்கை அரசு பாடுபடும் என்று கூறப்பட்டுள்ளது. சமாதானக் கொள்கையுடைய இலங்கை அரசுடன் எமது அரசு ஒத்துழைக்கும். இந்தக்கொள்கையை அமுல் நடத்துமாறு இயக்கம் நடத்த வேண்டும். சோஷலிச இயக்கங்கள் ஒன்று திரண்டு இயங்கினால் பெரும் வெற்றி கிடைக்கும்.

கம்யூனிஷ சோஷலிச முற்போக்கு வாதிகளால் உலக சமாதானத்தை நிலைநாட்ட முடியும் என்ற நம்பிக்கையுண்டு. ஐக்கியம் ஓங்கி வளர்ந்தால் உலக சமாதானம் ஏற்படும்.

"ஜேர்மனில் இரு நாடுகள் உண்டு. ஒன்று ஜேர்மன் குடி

(7ம் பக்கம் பார்க்க)

# "வட்டமேசை மாநாட்டின் மூலம் பிரச்னையைத் தீர்ப்பதே நோக்கம்"

## தமிழ்க்காங்கிரஸ் செயலாளர் குமார் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"கடந்த 3 வருடங்களாக உலக நாடுகளில் பிரசாரம் செய்து வருவதாகக் கூறும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் உலகில் தமிழ் ஈழத்தை எந்த நாடாவது அல்லது உலகில் எந்த பிற இயக்கமாவது ஆதரித்திருக்கிறதா என்று கூறுவார்களா? உலக நாடுகளில் வாழும், ஈழத் தமிழ் இளைஞர்கள் மட்டுமே தமிழ் ஈழத்தை ஆதரித்துவருகிறார்கள் என்பதே உண்மை"

தமிழ்க் காங்கிரஸ் தலைமைச் செயலகத்தில் நடந்த கருத்தரங்கில் "இன்றைய தமிழர் நிலை" என்பதுபற்றி பேசிய தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு குமார் பொன்னம்பலம் மேற்கண்டவாது கூறினார்.

சட்டத்தரணி ஜிம்மி இராசரத்தினம் தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் திரு. குமார் பொன்னம்பலம்கூறியதாவது:

"அமெரிக்க மாகாணம் எடுத்த தீர்மானத்தில் கூட, தமிழ் ஈழம் பற்றி ஒருவார்த்தையாவது கூறப்படவில்லை. ஈழத் தமிழருக்குள்ள கஷ்டங்கள் நீக்கவேண்டுமென்று அரசைக் கோருவதுதுயன் அத்தத் தீர்மானமாகும்.

**ஆயுதப் போராட்டம்**

"தமிழ் ஈழத்தை ஆயுதப் போராட்டம் மூலமே பெற முடியும். இந்தக் கருத்தையே கூட்டணியிலிருந்து வெளியேறிய மாவை சேனாதிராசாகூட, அண்மையில் நடந்த கூட்டமொன்றில் தெரிவித்திருக்கிறார். ஆனால் கூட்டணித் தலைவர்கள், ஆயுதப் போராட்டம் பயனளிக்காது என்று கூறியிருக்கிறார்கள் அறப்போராட்டம், என்று கூறுகிறார்கள். ஆனால் இதுவரை எப்படியான அறப்போராட்டம் என்று கூறவில்லை திட்டம் இருந்தால் வெளியிடலாமே இதுவரை உலகநாடுகள் விடுதலையடைந்த மார்க்கங்களை கூட்டணியினர் தமிழ் மக்களுக்கு எடுத்துக் கூறத் தவறிவிட்டனர்.

"அறப் போராட்டத்திலும் பல வழிகள் உண்டு. ஒன்று தனக்குத் தீ மூட்டிக் கொள்வது உண்ணாவிரதம் இருப்பது மறியல் செல்வது இப்படிப் பல உண்டு. தலைவர் ஒருவர் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து, அதனால் ஏற்பட்ட கிளர்ச்சியினால் தான், தெலுங்கானா மாகாணம் ஆந்திராவிலிருந்து தனிமாகாணமாகப் பிரிந்தது. கூட்டணியினர் இப்படியான அறப் போராட்டம் செய்யப் போகிறார்களா?

தாமாகவே சுதந்திரப் பிரகடனம் செய்வது மற்றொரு மார்க்கம். ரோடிஷியாவில், திடீரென ஒருநாள் தனி நாடெனச் சுதந்திரப் பிரகடனம் செய்தனர். இந்நாட்டிற்கு, மற்ற நாடுகள் பொருளாதார தடைகள் விதித்தும் கூட, அண்மையில் பூரண சுதந்திர நாடாகியது.

"தமிழ் இளைஞர் கொலை செய்யப்பட்டபோது குமார் எங்கு இருந்தார் என கூட்டணித் தலைவர் கேள்வி எழுப்பியுள்ளார். இக்கொலைகள் அவசரகால சட்டம் அமுலில் இருந்தபோது நடந்தது இந்த அவசரகாலத்தை அரசுதான் கொண்டு வந்தது. அந்த அரசில் இறுதிவரை கூட்டணியிலேயே இருந்தார் எனக் கூட்டணித் தலைவர்களால் கூறப்படும் அமரர் கனகரத்தினம் அமைச்சராக இருந்தார். கூட்டணி கனகரத்தினம் அமைச்சராக இருந்துள்ளதால் இக்கொலைகளுக்கு கூட்டணிக்கும் பங்குண்டு. எத்தனை இளைஞர்களுக்காக தான் வாதாடியிருக்கிறேன் என்பது கூட்டணியினருக்குத் தெரியாது

"தமிழ் காங்கிரஸின் முக்கிய கொள்கை வட்டமேசை மூலம், தமிழர் பிரச்னையைத் தீர்க்க முயல்வது அது முடியாவிட்டால் சுதந்திர தமிழகம் அமைப்பது என்பதே.

"வட்டமேசை மாநாட்டைக் கூட்டுமாறு பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டுவர வேண்டும் அதற்கு பாராளுமன்றம் செல்ல வேண்டும். வட்டமேசையை எதிர்த்து வந்த சுதந்திரக் கட்சியினரும், கூட்டணியினரும் கூட அதனை ஆதரிகின்றனர் எந்தக் கட்சியும் அதனை எதிர்க்கவில்லை. இடதுசாரிகள் கூட இன்று சுயநிர்ணய உரிமைபற்றி சொல்கிறார்கள். அவர்களின் இத்தகைகருத்தை வட்டமேசை மாநாட்டில் வைக்கலாம். ஆதலால் வட்டமேசை மாநாட்டைக் கூட்ட முயற்சிப்போம்.

தலைவர்களை எதிர்பார்க்காமல் இளைஞர் பேரவையினர், தங்களிடமுள்ள திட்டத்தை மக்கள் முன்வைத்து செயல்படவேண்டும். தமிழ் ஈழம் எட்டி அமையும் என்பதை வெளியிடட்டும். ஆயுதப் போராட்டம்தான் வழியென்றால், தமிழ் மக்கள் எல்லோரையும் பங்கு கொள்ள செய்ய வேண்டும். ஒருவர் அல்லது இருவர் ஆயுதப் ஏந்தி நடக்கப்போவது ஒன்றுமில்லை.

தமிழினத்திற்கு ஆபத்து ஏற்படும் போதெல்லாம் தமிழ் காங்கிரஸும் சேர்ந்து எதிர்ப்பைக் காட்டி வந்துள்ளது."

(க-கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் கொரியாவில் ராணுவச்சட்டம்!

## பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டன

சியோல், மே 18

தென்கொரியாவில் மாணவர்கள் நடாத்திய ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து நாடுமுழுவதும் ராணுவச் சட்டம் அமுல் நடத்தப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகள் யாவும் தடைசெய்யப்பட்டுள்ளதுடன், பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் யாவும் மூடப்பட்டுள்ளன.

நேற்று நடைபெற்ற அமைச்சரவையின் அவசரக்கூட்டத்தின் பின்னர் அரசின் இந்த முடிவை செய்தித்துறைமந்திரி திரு. லீ தெரிவித்தார்.

அரசை எதிர்த்து மாணவர்கள் நடாத்திய ஆர்ப்பாட்டங்களே வன்முறைச்சம்பவங்களை அடுத்து அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட ராணுவச் சட்டத்தைத் தொடர்ந்து நாட்டை ராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளது.

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்த மாணவர்களில் 15 பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர். (கு)

## உசன் - யாழ். பஸ் சேவை

(பச்சிலைப்பள்ளி)

உசனிலிருந்து கொடிகாமத்தினூடாக யாழ்ப்பாணத்திற்கு மிக விரைவில் பஸ் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. உசன் பகுதி மக்கள் தமது பிரயாண கஷ்டத்தினை யாழ் அரசாங்க அதிபர் யோகேந்திரா துரைசுவாமியிடம் எடுத்துக் கூறியதன் பேரில் யாழ் அரசாங்க அதிபரின் முயற்சியினால் இச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இச் சேவை ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் இப்பகுதி மக்கள் எதிர் நோக்கி வந்த பிரயாணக் கஷ்டங்கள் தீர்ந்துவிடும். (ச)

# ராணுவம்-கொரில்லாமோதல் 100 பேர் பேலி!

### சன்சல்வடோரில் சம்பவம்

சன்சல்வடோர், மே 18

சன்சல்வடோரில் ராணுவத்தினருக்கும், இடதுசாரிக் கொரில்லாக்களுக்குமிடையே நடைபெற்ற மோதலில் நூற்றுக்கும் அதிகமான இடதுசாரிக் கொரில்லாக்கள் உயிரிழந்துள்ளனர்.

அரசாங்கத்துக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்த இடதுசாரிக் கொரில்லாக்களுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டபோதே கொரில்லாக்கள் உயிரிழந்தனர்.

தேசிய ரீதியில் வேலைநிறுத்தம் செய்யுமாறும், இம்மாதம் 20ம் திகதி அரசுக்கு எதிராக கிளர்ந்தெழுமாறும் இடதுசாரிக் கொரில்லாக்கள் கோரிக்கைவிட்டிருந்ததுடன் நேற்று கிராமங்கள் சிலவற்றைத் தாக்கியபோதே ராணுவத்தினர் தாக்குதல் நடத்தினார்கள். (கு)

# ஜப்பானிய அரசு மீது மக்கள் ஆதரவும் குறைந்துவிட்டது!

### சர்வஜன வாக்கெடுப்பில் வெளிவந்த தகவல்

டோக்கியோ, மே 18

ஜப்பானியப் பிரதமர் திரு. ஒகிராவுக்கும் ஆளும் கட்சியான லிபரல் கட்சிக்கும் ஆதரவு குறைந்துவிட்டது என்று ஜப்பானிய பத்திரிகை ஒன்று நடத்திய சர்வஜன வாக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

ஜப்பானிய அரசாங்கம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மூலம் தோற்கடிக்கப்படுவதற்கு முன்னர் எடுக்கப்பட்ட இந்த வாக்கெடுப்பில் எதிர்க்கட்சியான சோஷலிஸ்ட் கட்சியும், லிபரல் கட்சியும் சமமான வாக்குகளைப்பெற்றுள்ளன.

மூன்று ஆண்டுகளின் பின்னர் எதிர்க்கட்சியும் ஆளும் கட்சியும் இவ்வாறு மக்கள் மத்தியில் சரிசமமான ஆதரவைப்பெற்றது இதுவே முதல் தடவையாகும். (கு)

தமிழ்நாட்டில்

# தமிழ் ஆராய்ச்சிக்கு தமிழ் பல்கலைக்கழகம்

### திமுக-இ.காங்கிரஸ் கூட்டணி அறிக்கை

சென்னை, மே. 18

தமிழ் ஆராய்ச்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்குமாக தமிழ் நாட்டில் தமிழ் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்படும்.

எதிர்வரும் தமிழக சட்டசபைத் தேர்தலில் போட்டியிடும் தி. மு. க -இந்திரா காங்கிரஸ் கூட்டணி இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

23 அம்சங்களைக்கொண்ட இக்குறைந்தபட்சத் திட்ட அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

தமிழகத்தை தொழில்துறையில் மீண்டும் முன்னணிக்குக் கொண்டுவர இக்கூட்டணி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

உள்ளூராட்சிமன்றத் தே

(2ம் பக்கம் பார்க்க)

### வியன்னாவில் நடைபெற்ற

# சோவியத் - அமெரிக்க பேச்சுவார்த்தைகள்

### திருப்தியாக இருந்ததாக குரோமிக்கோ தகவல்

வியன்னா, மே 18

சோவியத் யூனியன், அமெரிக்கா ஆகிய நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் நேற்று வியன்னாவில் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினார்கள்.

ஒஸ்ரியா நடுநிலைமை வகிக்கும் நாடாக பிரகடனம் செய்யப்பட்டு 25 ஆண்டுகள் பூர்த்தியாவதையொட்டி நடைபெற்ற வைபவங்களில் கலந்துகொள்ளவந்திருந்த இருநாட்டு வெளிநாட்டமைச்சர்களும் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினர்.

இப் பேச்சுவார்த்தையை முடித்துக்கொண்டு இன்று நாடு திரும்பிய சோவியத் வெளிநாட்டமைச்சர் திரு. குரோமிக்கோ விமான நிலையத்தில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் "தாம் அமெரிக்க வெளிநாட்டமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தை நல்ல பயனுள்ளதாக அமைந்ததாக கூறினார்.

இதேவேளையில் இச்சந்திப்பு தொடர்பாக பிரிட்டிஷ் பத்திரிகையான கார்டியன் வெளியிட்டுள்ள செய்தியில், ஆப்கான் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண்பது தொடர்பாக ஆட்கான் தெரிவித்த யோசனையை அமெரிக்க வெளிநாட்டமைச்சர் செனட்டர் எட்மன் மஸ்கி நிராகரித்திருப்பது விவேகமற்ற செயல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (கு)





அடங்கிய செறிதிரவம் உற்பத்தியாளர்
பேயர் ஜெர்மனி
இலங்கையில் இப்பொருள் தயாரிப்பாளர்
ஹேகெம் லிமிடெட்
400. டீன்ஸ்ரோட். கொழும்பு 10.

குரேட்டர் 3% மணிகள்

| | | |
|---|---|---|
| 500 | கிராம் | ரூபா 10 00 |
| 2 | கி. கிராம் | ரூபா 32 50 |
| 25 | கி. கிராம் | ரூபா 380 - |

உண்டேன் EC 20%

| | | |
|---|---|---|
| 100 | மி. லீட்டர் | ரூபா 15/50 |
| 200 | மி. லீட்டர் | ரூபா 28/50 |
| 450 | மி. லீட்டர் | ரூபா 53/50 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜகம்ஸ்** (மல்லாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி— விஜயகுமாரி
**குங்குமம்**
(புதிய பிரதி)

**வெஸ்லி** மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சுந்தராம்பாள் நடித்த
**ஒளவையார்**
(புதிய பிரதி)

**ராஜா** (யாழ்நகர்) கடைசி இரு தினங்கள்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி
விஜயா
நாகேஷ்
**திருடன்**
(புதிய பிரதி)

வெற்றிகரமான 8 வது வாரம்
தொலைபேசி: 466
**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
தினசரி: 10-30, 1-30, 4-30, 7-15 10-30
சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி
நடித்த
**நிறம் மாறாத பூக்கள்**
(வண்ணச்சித்திரம்)

**மனோஹரா** A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
Daily at 10-30, 4-45, 7-15 & 9-45
**MYSTERIOUS Dr. SATAN**
(Color)

**ராணி** (யாழ்நகர்)
தினசரி 5 காட்சிகள்
10-30, 1-30, 4-15, 7-00, & 9-45
இந்தியாவில் தொடர்ந்து 200 நாட்கள் ஓடி வெள்ளிவிழா சாதனை ஏற்படுத்தியது
✶ கமலஹாசன் (இருவேடங்களில்)
✶ ஸ்ரீதேவி மற்றும்பலர் நடித்த
**கல்யாண ராமன்** (கலர்)
தொடர்ந்து கொட்டகை நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்படுவதால், ரிக்கற்றுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30 6-30, 9-30
சிவாஜி- விஜயா நடித்த
**தங்கப்பதக்கம்**

**வினோ** (யாழ்நகர்) போன்: 789
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி-லதா
**ஞானக்குழந்தை**

வெற்றிகரமான 5-வது வாரம்
**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
[illegible]
**ரத்தத்தின் ரத்தமே**
(வண்ணக்கலர்)
ஜோ தேன் ஆனந்த்

**சாந்தி** யாழ் நகர் போன்: 7642
10-30, 2-30, 6 30, 9-45
கமல், ஜெயசித்ரா, சிவகுமார், கே. பாலசந்தரின்
**சொல்லத்தான் நினைக்கிறேன்**
(புத்தம் புதிய பிரதி)
23-5-80 **"SHARK'S TREASURE"**
(color)


✶ சர்ச்சைக்குரிய தங்கஏலவிற்பனை

# ஜனதாவின் நடவடிக்கை; வங்கி ஆளுனர் விசாரணை!

புதுடில்லி, மே 18
ஜனதா கட்சியின் ஆட்சியிலபோது அரசாங்கம் நடத்திய சர்ச்சைக்குரிய தங்க ஏலவிற்பனை தொடர்பாக றிசேவ் வங்கியின் முன்னாள் கவர்னர் திரு ஏ. ஆர். புரி விசாரணை நடாத்தவுள்ளார்.

1978ம் ஆண்டு ஜனதா கட்சி ஆட்சியிலிருந்தபோது அரசாங்க கணக்கிலிருந்த தங்கத்தை ஏலத்தின் மூலம் விற்பனவு செய்தது.

அரச கணக்கிலிருக்கும் தங்கத்தை விற்பதென்ற அரசாங்கத்தின் அப்போதைய முடிவு சரியானதா என்பது குறித்து ஆராயவுள்ள திரு. புரி, அரச தங்கத்தை சிலதீயசக்திகள் தம்பக்கம் சேர்த்துக்கொள்ள முயற்சித்தனவா என்பது குறித்தும் விசாரணை நடாத்தவுள்ளார்.

இவ்விசாரணையில் யாராவது தவறிழைத்தது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது குறித்தும் திரு. புரி சிபார்சு செய்யவுள்ளார். (ஐ)

## இன்றைய பலன்

வைகாசி மாதம் 6-ம் திகதி திங்கட்கிழமை [19-5-1980]

மேடம்: கடமையில் அதிக ஆர்வம் பிறக்கும். எதையும் துரிதமாகச் செய்யின் வெற்றி காண்பீர்கள். சிலருக்கு நன்மையான இடமாற்றமும் ஏற்படலாம். தெய்வத்தின் துணையுமுண்டு.

இடபம்: புதிய தொழில் மூலம் இலாபம் கிடைக்கும். புத்திரர்களுடைய செல்வாக்கு பெருகும். புதுமையான எண்ணங்கள் மனதில் வட்டமிடும். பூமியால் முன்னேற்றமும் உண்டு.

மிதுனம்: எண்ணங்கள் ஆயிரம் சிந்தையிலே வந்து உதிக்கும். ஏமாற்றம் தாக்கும். விந்தையான போகு வேடிக்கை காட்டும்.

கடகம்: கழுகுப் பார்வை உங்களை வட்டமிடும். எடுத்த காரியத்தில் தாமதம் ஏற்படலாம் ஏமாற்றம் தென்படும். அரச பயத்துக்கு இடமுண்டு. எதிலும் அடக்கத்துடனும் நிதானத்துடனும் இருக்கவும்.

சிங்கம்: இதயப்படுதாவில் இன்பக் கதிர். வாழ்க்கை சௌகரியங்கள் நிறைந்ததாக இருக்கும். கற்றதனால் பயன் இன்று கைமேல் கிடைக்கும். நுட்பமான வேலைகளில் ஈடுபடுபவர்கள் போற்றப்படுவார்கள்.

கன்னி: அவசரக் கோலம் தலைகாட்டும். அதன் பிரதி துன்பங்கள் தொடரும். ஆசாரக் குறைவும் உண்டு. அடக்கமே நன்று.

துலாம்: உறவுகள் பலப்படும் உள்ளத்தில் உவகை துள்ளும் உயர்வுக்கு வழிபிறக்கும், உவப்பான தினம்.

விருட்சம்: கனிவானபேச்சு காந்தம் போல் பார்வை கன்னியர் உறவு காதலுக்கும் இடமுண்டு கவர்ச்சிகரமான நாள்.

தனு: உறவாடிக் கெடுப்பதற்கும் பகையாளிகள் வருவார்கள். உற்சாகம் குன்றும். பிரயாணத்தின் போது பொருள் தவறக்கூடும். சிலருக்கு உஷ்ணரோகம் சம்பந்தமான நோய் ஏற்படும்.

மகரம்: வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பங்கள் பந்தக்காலின் கொண்டாட்ட முடி பாவையர் களிப்பும்-தளிர்ந்திடும் புகழ்.

கும்பம்: செலவினங்கள் அளவுக்கு மிஞ்சினதாக இருக்கும். நண்பர்களின் தொல்லைகளால் நஷ்டம் அடைவீர்கள். தொழில் புரியும் இடத்தில் புதிய எதிர்ப்பைச் சமாளிக்கவேண்டிய நிலைமை ஏற்படலாம்.

மீனம்: இலட்சியப் பாதையில் வெற்றி நடைபோடுவீர் உயர்மட்டத்து அன்பும் ஆசியும் கிடைக்கும். பதவி உயர்வுக்கும் இடமுண்டு

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை


**ஹரன்** காங்கேசன்துறை
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்—விஜயா
இதோ எந்தன் தெய்வம்
(புதிய பிரதி)


## "ஹிட்லர் கையாண்டயுக்திகள் இங்கும்கையாளப்படுகின்றன"

(3-ம் பக்கத் தொடர்ச்சி)
"யூத இனத்திற்கு எதிராக காலத்திற்குக்காலம் இனக் கொலை கட்டவிழ்த்து விடப்பட்டது. இந்நாட்டிலும் இன வெறி காலத்திற்கு காலம் கட்டவிழ்த்துவிடப்பட்டது. 58ம் ஆண்டு கலவரத்திலும் பார்க்க பெரிதாக 77ல் நடந்தது. சென்ற ஆண்டும் உருவாக்கப்பட்ட இனவெறி மயிரிழையில் தவிர்க்கப்பட்டது.

இந்நாட்டு முற்போக்கு சக்திகள் இனவெறிக்கெதிராக ஒன்று திரண்டு போராடக் கடமைப்பட்டிருக்கின்றன.

"இந்நாடு இரண்டு தேசிய இனங்களை உடையது. ஒன்று ஆளும் இனமாகவும் மற்றது ஆளப்படும் இனமாகவும் வாழ்ந்து வருகின்றன. இவர் சரித்திரத்தைத் திரித்து கூறி வருகிறார்கள் தமிழருக்குத் தாயகம் இல்லை என்று எழுதி வருகிறார்கள். இங்கு சமூகமளித்துள்ள பேராசிரியர் இப்படியான சக்திகளை ஒழித்துக் கட்ட முன்வரவேண்டும்.

### பிரிக்கப்பட்ட சிறியநாடு

பிரிக்கப்பட்ட சிறியநாடு முன்னேறாது எனச் சிலர் கூறுகிறார்கள் கிழக்கு ஜேர்மன் பிரிக்கப்பட்ட சிறியநாடு அந்தநாடு எவ்வளவோ வளர்ச்சியடைந்துள்ளது.

யுத்தத்தின் பின்னர் வளர்ச்சியடைந்து இலங்கை போன்ற நாடுகளுக்கு உதவிவருகிறது. உண்மையான சோஷலிசத்தை உருவாக்க முற்போக்கு சக்திகளோடு ஒன்றுசேர்ந்து நிற்க ஆயத்தமாக நாம் நிற்கிறோம்.

இலங்கை ஜேர்மன் நட்புறவுச் சங்கச் செயலாளர் பேராசிரியர் திரு. செல்வநாயகம் பேசுகையில் ஜேர்மனுக்கு பாரிய கலாச்சார பண்பு உண்டு மனிதாபிமான தத்துவத்தை முதலில் உலகிற்குக் கொடுத்த நாடு அது. பாரம்பரியத் தத்துவ ஞானம் கலை, சங்கீதம் ஆகியவற்றில் திறமைசாலிகள் உள்ளனர் என்றார்.

மானிப்பாய் எம். பி திரு. வி. தர்மலிங்கம் கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகர் திரு.ஏ. வைத்திலிங்கம் ஆகியோரும் பேசினர். (ஈ-அ)

## இடதுசாரி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)
யாக. பாசிசத்தை வெற்றி கண்ட நாளை அது கொண்டாடிவருகிறது. மற்றது மேற்கு ஜேர்மனி. அந்நாடு இத்தினத்தைக் கொண்டாடுவதில்லை. இதிலிருந்து எங்கள் நாட்டைப்பற்றிய கணிப்பை எடுக்கலாம்.

### ரஷ்யாவின் உதவி

பாசிசத்தை கடந்த காலத்தில் தோற்கடிப்பதற்கு ரஷ்யா பெரும் தொண்டாற்றியுள்ளது. இவர்களின் சேவையைப் பின்பற்றி சோஷலிச முகாம் வலுப்பெற்றுவருகிறது. இவற்றின் ஆதரவு பெற்றுப் புதுவழிகளைக் கையாளவேண்டியது அவசியம்.

யுத்தம் நடந்த காலத்தில் நான் சிறுவனாக இருந்தேன். அரசியலும் தெரியாது. யுத்தப் பற்றிப் புரியாது. யுத்தம் என்றால் திரும்பவும் வரக்கூடாது என்று எண்ணுகிறேன். எந்தக் குழந்தையும் யுத்தம் வேண்டாம் என்றுதான் சொல்லும். யுத்தம் வருவதற்கான நடவடிக்கைகள் உலகில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. சமூக விரோத சக்திகள், பிற்போக்கு வாதிகள், யுத்தத்தை ஆரம்பிக்க முயற்சிக்கும் நேரத்தில் பொதுமக்கள் யுத்தம் வேண்டாமெனக் குரல்எழுப்பி வருகின்றனர்.

### யுத்தத்தைத் தடுக்கவேண்டும்

யுத்தம் திரும்பவும் வரக்கூடாதென ஜனநாயக சக்திகள் விரும்புகின்றன. கொடிய சக்திகள் யுத்தத்தைக் கொண்டுவர முயற்சிக்கின்றன. 35 வருடம் கழிந்துவிட்ட பின்பும் யுத்தத்தை திரும்பவும் கொண்டுவரமுடியாதிருப்பதற்கு முற்போக்குச் சக்திகள். ஜனநாயக சக்திகள் பாசிசத்தை எதிர்க்கும் சக்திகள் உருவாகின்றனத இது எடுத்துக்காட்டுகிறது. கடந்தகால யுத்த சக்திகளால் மீண்டும் யுத்தத்தை மூட்டிவிட முடியவில்லை.

உலகெங்கும் தற்போது பதட்டநிலை உருவாகிவருகிறது. முற்போக்குச் சக்திகள் ஜனநாயக சக்திகள் ஒன்றுதிரண்டு யுத்தத்தை நிறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்" (ஈ-அ)

## "விநாயக புராணம்" சொற்பொழிவு



மாதகல் அரசடி சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் சென்ற புதன் கிழமை ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து 15 நாட்கள் உற்சவம் நடைபெற்று இம்மாதம் 28ம் திகதி முடிவடையும். தொடர்ந்து இரவு "விநாயக புராணம்" பற்றி சிவநெறிச் செல்வி பண்டிதை திருமதி. சிவபாக்கியம் பாலநாதன் தொடர்விரிவுரையாற்றுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dilka Watch Works
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள...

டில்கா வாச்வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல்மாடி.
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு 50 சதம்
The EELANAADU

## சிறுவர் ஆஸ்பத்திரி ஊழியர் வேலைநிறுத்தம்

(கொழும்பு) பொரளையிலுள்ள, லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்திய சாலையில் கடமைபுரியும் சிற்றூழியர்கள், நேற்று திடீர் வேலைநிறுத்தத்தில் இறங்கினர். இந்த வேலை நிறுத்தம் ஏனைய ஆஸ்பத்திரிகளுக்கும் பரவலாம் என்று அஞ்சப்படுகிறது.

மாணவர்களுக்கான
கணிதப்பயிற்சி
6-ஆம் வகுப்பு
புதிய கணிதப் பயிற்சி 5-90
7-ஆம் வகுப்பு
புதிய கணிதப்பயிற்சி (அச்சில்)
8-ஆம் வகுப்பு
புதிய கணிதப் பயிற்சி 4-75
9 ஆம் வகுப்பு
புதிய கணிதப் பயிற்சி 7-00
2-ஆம் வகுப்பு
கணிதப் பயிற்சிக் கோவை 1-50
காந்தளகம்
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

### ஆசிரியர்களின் சம்பளப் பிரச்னை:

## நடைமுறைச் சாத்தியமற்ற நிபந்தனையை ஏற்பதில்லை!

### வடமாகாண அதிபர்கள் சங்கம் முடிவு

(யாழ்ப்பாணம்) ஆசிரியர்களினதும் பாடசாலை ஊழியர்களினதும் சம்பளத்தைக் காசோலை மூலம் அதிபர்கள் வழங்குவதற்கு அவர்களின் ஏகமனதான சம்மதம் பெறப்படவேண்டும் என்ற அரசின் நிபந்தனை நடைமுறையில் சாத்தியமற்றதானதால் இந் நிபந்தனையை அதிபர்கள் சங்கம் ஏற்றுக் கொள்வதில்லையெனத் தீர்மானித்துள்ளது.

நேற்றுக்காலை யாழ் மத்திய கல்லூரியில் நடைபெற்ற விசேட பொதுக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

கல்வி அமைச்சே நேரடியாக காசோலையாகவோ அல்லது பணமாகவோ சம்பளத்தை ஜூன் மாதம் தொடக்கம் வழங்குவதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்ய வேண்டும் என்று கோரும் தீர்மானம் ஒன்றும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. (கு)

## வருடாந்த மகோற்சவம்

(யாழ்ப்பாணம்) யாழ்ப்பாணம் வடகோவை ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து பத்துத்தினங்களும் உற்சவம் நடைபெற்று, 28-ம் திகதி தேர் உற்சவமும், 29-ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும். 30-ம் திகதி பூங்காவனம் — திருக்கல்யாணமும் நிகழும்.

## தேசிய இளைஞர்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறையில் மேற்கொள்ளக்கூடியவகையில் பயிற்சி அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்காக பிரதேச இளைஞர் சேவைப் பிரிவுகளை அடக்கப்படவுள்ள இந்த அடிப்படையில் தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளில் சாவகச்சேரித் தொகுதி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இங்கு தெரிவு செய்யப்படவிருக்கும் 2 வருட காலங்கொண்ட 5 திட்டங்களில் பங்குபற்றும் 250 இளைஞர், யுவதிகள் பயிற்சி பெறுவார்கள். இத்திட்டத்தின் வெற்றி ஏனைய தொகுதிகளிலும் இப்பயிற்சி இடம்பெற வாய்ப்பளிக்கும் என்பதில் ஐயமில்லை.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தேசிய இளைஞர் சேவை மன்ற நடவடிக்கைகள் மிக அண்மைக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் பொருளாதார, சமூக அபிவிருத்தியில் குறிப்பிடக்கூடிய பங்கினை ஆற்றியுள்ளது என்பது மட்டுமல்ல, பல நன்மைகளை அடையவும் முயலுகின்றது.

## சம்பள...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யான 1500 ரூபாவை மீட்டுள்ளனர்.

சந்தேக நபரான வல்லிபுரம் மகேந்திரனிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணத்தில் வாங்கப்பட்டதாக கூறப்படும் 400 ரூபா பெறுமதியான கைக்கடிகாரத்தையும் பொலிசார் மீட்டுள்ளனர்.

கொள்ளைக்குப் பாவிக்கப்பட்டதாக கூறப்படும் ஏ 40 கார் ஒன்றையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

### சிறையில் திட்டமிட்டனராம்

இளைஞர்கள் ஏற்கனவே திமடியில் இருந்தபோது, சிறைச்சாலையில் வைத்து சிநேகிதமாகி இக் கொள்ளைக்குத் திட்டமிட்டதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

### உள்ளூர், வெளியூர் இளைஞர்

வெளியூரைச் சேர்ந்த 2 இளைஞரும் உள்ளூரைச் சேர்ந்த 3 இளைஞரும் சேர்ந்து இக் கொள்ளையை நடத்தியிருப்பதாகவும் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை உள்ளூரைச் சேர்ந்த இளைஞர்களிடம் கொடுத்துவிட்டு வெளியூரைச் சேர்ந்த இளைஞர்கள் தப்பிச்சென்றதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

### பணத்தைப் பங்கிட்டனர்

பின்னர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் நவீன மார்க்கற் பகுதியில் அமைந்துள்ள பிரபல குளிர்சாதன மூட்டப்பட்ட ஹோட்டல் அறையில் வைத்து கொள்ளையடிக்கப்பட்டதை இளைஞர்கள் பங்குபோட்டு பிரித்து எடுத்துக்கொண்டார்கள் என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

### பொலிசாருக்கு பாராட்டு

இக் கொள்ளை தொடர்பாக துப்புத்துலக்கி, சந்தேகநபர்களை கைதுசெய்த பொலிசாரை பாராட்டி கௌரவிக்குமாறு, பொலிஸ் அதிபர் திரு. இங்ஸ்லி விக்கிரமசூரியா பொலிஸ் மா அதிபருக்கு சிபார்சுசெய்துள்ளார்.

### தப்பமுடியாது

இச் சம்பவம் தொடர்பாக நேற்று பொலிஸ் அதிபருடன் தொடர்பு கொண்டபோது குற்றவாளிகளுக்கு இது ஒரு பாடமாக இருக்கட்டும். குற்றவாளிகளை பொலிசார் உடனடியாகவோ தாமதித்தோ கண்டுபிடித்துவிடுவார்கள் என்பது நினைவிருக்கட்டும்" என்றார்.

இக் கொள்ளை சம்பவம் தொடர்பாக பொலிசார் தொடர்ந்து விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (க)

### பிள்ளைகள் பராமரிப்பு வழக்கு:

## தாயிடம் 3 நாட்கள் தந்தையிடம் 3 நாட்கள்

(யாழ்ப்பாணம்) பிள்ளைகளின் பராமரிப்பு தொடர்பான வழக்கொன்றில் 3 தினங்கள் தாயாரிடமும் அடுத்த 3 தினங்கள் தந்தையின் பராமரிப்பிலும், பிள்ளைகள் இருக்கவேண்டுமென்று யாழ் குடும்ப நீதிமன்ற நீதிபதியால் முடிவு செய்யப்பட்டது.

நல்லூரைச் சேர்ந்த இராசநாதன் யோகேஸ்வரி என்பவர், தமது பிள்ளைகளான ரூபராசா (மூன்றரை வயது), ரவுக்கா (இரண்டரை வயது) ஆகியோரை தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரி அவரது கணவர் ஆசீர்வாதம் இராசநாதன், மாமியார் நாகலிங்கம் இராசமணி ஆகியோருக்கு எதிராக மனுவொன்று தாக்கல்செய்திருந்தார்.

இம் மனு யாழ் குடும்ப நீதிமன்றத்தில் நீதிபதி திரு. எம். டி. வேசுரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணி சி. நாகராசாவும், எதிர்மனுதாரர் சார்பில் சட்டத்தரணி எஸ். லோகேஸ்வரனும் ஆஜரானார்கள்.

மனுதாரான யோகேஸ்வரி, எதிர்மனுதாரர்களான இராசநாதன், இராமணி பிள்ளைகளான ரூபராசா ரவுக்கா ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜரானார்கள். எதிர்மனுதாரர்களின் உறவினர் பலரும் நீதிமன்றம் வந்திருந்தனர்.

குழந்தைகளின் நன்மையையும் எதிர்காலத்தையும் கருதி சமாதானமாகச் செல்லுமாறு நீதிபதி, மனுதாரரையும், எதிர்மனுதாரரையும் பார்த்துக் கேட்டபோது, மனுதாரர் யோகேஸ்வரி சம்மதம் தெரிவித்தார்.

நீதிபதி பிள்ளைகளைப் பார்த்து "அழகான பிள்ளைகள்" என்று கூறியபோது சட்டத்தரணி நாகராசா, அழகான பெயர்களும் சூட்டியிருக்கிறார்கள் என்றார்.

சமாதானமாகப்போகுமாறு நீதிபதி எதிர்மனுதாரரான கணவனிடம் கேட்டபோது முயற்சிப்பதாக கூறியதுடன் பிள்ளைகளை 3 நாட்கள் மனைவியுடன் அனுப்ப சம்மதம்தெரிவித்தார்.

கடந்த தவணையின்போது கொக்குவில் கிலிம் கவுஸிற்கு அனுப்பப்பட்ட பிள்ளைகளை 3 நாளைக்கு தாயின் பொறுப்பில் ஒப்படைக்குமாறு நீதிபதி கட்டளையிட்டார். அடுத்த 3 தினங்கள் தந்தையின் பொறுப்பில் ஒப்படைக்குமாறும் நீதிபதி கட்டளையிட்டார்.

சமாதானமாகும் சூழ்நிலை காணப்பட்டதைத் தொடர்ந்து அதுபற்றி குடும்பநல உத்தியோகத்தரை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் தெரிவிக்கப்பட்டது. விசாரணை இம்மாதம் 24-ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது. (•)

## நற்செய்தி கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்) ஆத்மசரீர சுகமளிக்கும் அற்புதங்கள் பற்றிய நற்செய்தி கூட்டங்கள் யாழ் திறந்த வெளியரங்கில் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து ஒருவாரம் இலவசமாக நடைபெறவிருக்கின்றது.

சங். எம். பேர்னண்டோ, இக் கூட்டத்தில், ஜீவிக்கிற இயேசுகிறிஸ்துவின் வல்லமை பற்றிய நற்செய்தியை விளக்குவார்.

## சட்டத்தை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்படும் ஆலயங்களில் மந்திரிசபையின் அங்கீகாரத்துடன் பொலிசார் அவ்விடத்துக்குச் சென்று இத்தகைய உயிர்ப்பலியைப் புரிவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுப்பார்கள் என்று பிராந்திய அபிவிருத்தி, இந்து கலாசார அமைச்சர் திரு. சே. இராசதுரை தெரிவித்துள்ளார். (வெ)

## சீன ராக்கெட்

(சிட்னி) சீனா நேற்று, மத்திய பசுபிக்கில் ஒரு பகுதியை நோக்கி ராக்கெட் ஒன்றை செலுத்தியுள்ளதாக ஆஸ்திரேலிய உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மக்கிஞென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்
உங்களை
திருச்சிராப்பள்ளி, மதுரை, பம்பாய், கோலாலம்பூர், சிங்கப்பூர், பரிஸ், லண்டன், துபாய், சவூதி அரேபியா, கனடா ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்ல
மற்றும்
பாஸ்போட், அமெரிக்கன் டிறவலர்ஸ் செக், உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட், சுற்றுலாக்கள் ஆகிய உங்கள் தேவைகளை
கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்துகொள்ள
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
மக்கிஞென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.,
தபால் பெட்டி இல: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமான சேவை எங்களது!!

## மரண அறிவித்தல்

### சி. ஆறுமுகம்

இலையாணை, உடுப்பிட்டியைச் சேர்ந்த சி. ஆறுமுகம் காலமானார். இவர் மாகாழியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற சீராளனின் (நாகரத்தினம்), வைத்திய கலாநிதி சி. ஆ. குணரத்தினம், சித்தாமணி, ஞானசி, மகேஸ்வரி ஆகியோரின் தந்தையும், சேனுபதி, அம்பலம், இலச்சுமி, வைத்தியகலாநிதி இந்திராணி, பொன்னம்மா ஆகியோரின் மாமனுமாவார். இறுதிக் கிரியைகள் இன்று 19-5-80 மாலை 4 மணிக்கு அன்பரகம் உடுப்பிட்டியில் நடைபெறும்.

வைத்திய கலாநிதி
சி. ஆ. குணரத்தினம்
அன்பரகம்,
உடுப்பிட்டி.

5822

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெலிங்டன் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் மே 19-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under No CE/8948/ 78. The Eelanaadu, Post Box No 49, Telegram: "Eelanaadu, Phone: 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org